**12.02.2026**

**MCOP.No.156/2012**

**எ.ம.சா.2 : ஜெயராமன் பிரகாஷ்**

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் தாக்கல் செய்துள்ள பாலிசி பேக்கேஜ் பாலிசி என்றால் சரிதான். மேற்படி பாலிசி TN 77 7968 என்ற நெல் அறுவடை இயந்திரத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாலிசியில் சீட்டிங் கெபாசிட்டி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் பதிலுரை சங்கதிகள் அனைத்தும் உண்மை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் 3 வது பத்தியில் "மேற்படி டிரைவர் ஆசாக்கிரைதயாகவும், வேகமாகவும், கவனக்குறைவாகவும், ஓட்டி சென்ற பொழுது மாடு குறுக்கே வந்தபோது, 1 ம் எதிர்மனுதாரரின் டிரைவர் அவர் ஓட்டி சென்ற வாகனத்தை திடீரென்று இடது பக்கம் திரும்பியதால், மேற்படி நெல் அறுவடை வாகனம் கவிழ்ந்ததால் மனுதாரருக்கு காயங்கள் ஏற்பட்டது" என்றால் சரிதான்.

2) ஐம்டி 28 ஓட்டுநரை மட்டும் உள்ளடக்கியதல்ல என்றால் சரிதான். மேற்படி பாலிசியில் குறிப்பிட்டுள்ள ஐம்டி 28 ஓட்டுநர் கம் நடத்துநர், கிளினர் மற்றும் நடத்துநர் ஆகியவர்களை உள்ளடக்கியது என்றால் சரிதான். மேற்படி பாலிசியில் பேசிக் பாலிசி பிரிமியம் ரூ.1350 போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரிமியம் தொகை டிராக்டர் மற்றும் டிரைலருக்கு சேர்த்து பெறப்பட்டுள்ளது என்றால் அது டிரைலருக்காக 930 ரூபாய் பெறப்பட்டது.  இந்த விபத்து சம்மந்தமாக வேறு எந்த நீதிமன்றத்திலும் எங்கள் அலுவலகத்தில் இந்த மனுவைத் தவிர வேறு மனு எதுவும் நிலுவையில் இல்லை என்றால் சரிதான். ஒரு வாகனத்தை பொறுத்த வரை வாகனத்தின் உரிமையாளர் ஒரு தரப்பினர் மற்றும் காப்பீடு நிறுவனம் ஒரு தரப்பினர் என்றும் மற்ற நபர்கள் 3 ம் தரப்பினர்கள் என்றால் அதில் டிரைவர் 3 ம் தரப்பினராக வர மாட்டார்.

3) TN 77 7968 என்ற நெல் அறுவடை இயந்திரம் ஒரு சிறப்பான ஒரு வாகனம் என்றால் சரிதான். நெல் அறுவடை இயந்திரம் ஒரு உயரமான வாகனம் என்று

சொன்னால் சரிதான். அது கிளினர் இல்லாமல் இயக்க முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பாலிசியில் நெல் அறுவடை இயந்திரம் விவசாய வேலைக்கு மட்டும் அல்லாமல் விவசாயம் இல்லாத வேலைக்கும் பயன்படுத்தப்படும் வாகனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. டிரைலருக்காக non agriculture என்று போட்டுள்ளோம். நெல் அறுவடை இயந்திரத்தில் டிரைலர் என்று கூடுதலாக இல்லை என்றும் டிரைலரில் தான் டிராக்டர் உள்ளது என்று சொன்னால் பதிவு சான்றிதழில் அவ்வாறு குறிப்பு உள்ளது.

4) Miscellaneous agricultural type of vehicle என்ற தலைப்பில் வாகன உரிமையாளரிடம் பிரிமியம் பெறப்பட்டு பின்னிட்டு வாகனத்தின் மூலமாக ஏதும் இழப்பீடு கோரிக்கை ஏற்பட்டால் இன்சூரன்ஸ் நிறுவனம் தான் வழங்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. பேசிக் பிரிமியத்தில் வரும் நபர்களை statutory liability என்றும் கூடுதல் பிரிபமியத்தில் வரும் நபர்கள் additional liability என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் வட்டார போக்குவரத்து அலுவலர் என்ன சாட்சியம் அளித்துள்ளார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றும் அதை நான் படித்து பார்த்து வந்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி விபத்து ஏற்பட்டது 17.04.2012 என்றால் சரிதான்.

5) பாலிசி விதிமுறைகளை மீறிவிட்டார் என்பதற்கு நடவடிக்கை எதுவும் எடுத்துள்ளேனா என்றால் எங்களுக்குள் பரஸ்பர ஒப்பந்தம் உள்ளது என்பதால் ஒப்பந்தம் மீறினால் ஒப்பந்த படி நடக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 1ம் எதிர்மனுதாரர் பாலிசி விதிமுறைகளை மீறிவிட்டார் என்று நிறுவனம் சார்பாக வழக்கறிஞர் அறிவிப்போ வேறு எதும் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளோமா என்றால் இல்லை. மேற்படி பாலிசியில் 3ம் தரப்பு காப்பீடு தொகை பெறப்பட்டுள்ள நிலையில் இந்த விபத்துக்கான இழப்பீடுகளுக்கு வழங்க மேற்படி 2ம் எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் என்றால் மேற்படி விபத்து சம்மந்தப்பட்ட நபர் பாலிசியை பொறுத்து அனுமதிக்கப்படாத நபர் என்பதால் வழங்க வேண்டிய

அவசியம் இல்லை. மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கூடாது என்பதற்காகவே என்னுடைய பதிலுரைக்கு முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.02.12 17:38:44 +0530

**Accidents Claim Tribunal, Attur.**